

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி கோ.புதுப்பட்டியில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர். உடன் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துறை ஆணையாளர் விஜயலட்சுமி உள்ளிட்ட அதிகாரிகள், திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.



விருதுநகரில் வி.வி.எஸ். திருமண மண்டபத்தில் தி.மு.க. உட்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மற்றும் அனைக்கட்சி ஆலோசனைக் கூட்டம் விருதுநகர் மாவட்டம் சார்பில் SIR – யை எதிர்த்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன், சாத்தூர் எம்.எல்.ஏ. ரகுராமன், சி.பி.ஐ. முன்னாள் எம்.எல்.ஏ. இராமசாமி, காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கர், சிபிஎம் குருசாமி, ஆதி தமிழர் கட்சி சுந்தரராஜன், சுப்புராஜன், மனித நேயம் மக்கள் கட்சி மதன்கான், செந்தில் குமார், சமுத்திரம் , முன்னாள் சேர்மன் சுப்புராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி இராஜகுரு, நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், அரசு போக்குவரத்துக் கழக இராஜசெல்வம், மக்கள் நீதி மையம் காளிதாஸ் மற்றும் அனைத்துக் கட்சி சார்பாக ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர்.ரை எதிர்த்து – வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# இன்று (நவம்பர் 11) -ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

*வேலூர், நவ. 11 -*



வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் எதிர்வரும் 2026 -ல் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் பாசிச பாஜக ஒன்றிய அரசின் கைப்பாவையாக இருந்துக்கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை (SIR) தற்போது நடைமுறைபடுத்தும் பணியை துவங்கி உள்ளது. இதனை எதிர்த்து கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க SIR திட்டத்தை கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வேலூர் மாவட்ட தலைநகரமான வேலூர், அண்ணா கலையரங்கம் அருகில் இன்று (11.11.2025 -செவ்வாய்கிழமை) காலை 10.00 மணிக்கு மார்கிஸ்ட் கம்மிநியூஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் கே. பாலகிருஷ்ணன் அவர்கள் பங்குபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

எனவே நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர், செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு மற்றும் ஊர்க்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகி கள், பொது மக்கள் ஆகியோர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து

# இன்று புதுவையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கை!

புதுவை, நவ. 11 –

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா, காங்கிரஸ் தலைவர் வெ. வைத்திலிங்கம் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு. சலீம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் ராஜாங்கம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முதன்மைச் செயலாளர் தேவபொழிலன், திராவிடர் கழகம் வீரமணி, மதிமுக மாநில செயலாளர் ஹேமா. பாண்டுரங்கன், மக்கள் நீதி மய்ய பொதுச் செயலாளர் சந்திரமோகன், சிபிஐ (எம்எல்) பாலசுப்ரமணியன், மனிதநேய மக்கள் கட்சி பஷீர் அகமது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் முகமது அலி மற்றும் தோழமைக் கட்சிகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் இந்திய தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் சீராய்வு (SIR) கொண்டுவந்துள்ளது.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 12 மாநிலங்களில் SIR திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதீத சந்தேகங்களை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு மூலம் புதுச்சேரியில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

எங்கள் கூட்டணி கட்சிகள் எதிர்பார்த்தவாறே 4–ஆம் தேதியில் இருந்து இன்று வரை களத்தில் SIR பெரும்பாலான வாக்காளர்களை நீக்கப்படும் அச்சத்தை உறுதிபடுத்துகிறது. BLO–க்களும், BLA2 களுக்கும் இடையே சரியான தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்படவில்லை. தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002/ 2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமை அற்றதாகவும், குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

எனவே, இந்த SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காமல் ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சதிகார போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம் புதுச்சேரியில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டு வந்துள்ளதை கண்டித்து, இன்று ( 11–ஆம் தேதி) காலை 10 மணியளவில் புதுச்சேரி பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று நமது எதிர்ப்பை பதிவு செய்வோம் வாரீர்! வாரீர் !!

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீவிர வாக்காளர் சிறப்பு திருத்தத்தைக் கண்டித்து

# வேலூர் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!

*வேலூர், நவ. 11 -*



வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் சில மாதங்களில் நடைபெற உள்ள நிலையில் தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்துக்கொண்டு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) அமல்படுத்தும் பணியை தொடங்கி வுள்ளது. இதனை எதிர்த்து கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க SIR திட்டத்தை கொண்டுவந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இன்று(11.11.2025 -செவ்வாய்க்கிழமை ) மாவட்ட தலைநகரத்தில் வேலூர் மாநகரம் அண்ணா கலை அரங்கம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அதுசமயம் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்ட, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழகமூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. - பொன்.கௌதம சிகாமணி முன்னிலை!

# விழுப்புரத்தில் S.I.R.ஐக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## இரா.லட்சுமணன் தலைமை! க.பொன்முடி எம்.எல்.ஏ. உரையாற்றுகிறார்!

*விழுப்புரம், நவ. 11 -*

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடக் கோரியும், ஒன்றிய பாஜக அரசு கைப்பாவையாக மாறி எதேச்சிதிகாரப் போக்குடன் தமிழ்நாட்டில் SIR செயல்படுத்துவதையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் நகராட்சி திடலில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் நடைபெறுகிறது.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றுகிறார். விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி முன்னிலை வகிக்கின்றனர் .

கழக துணை பொது செயலாளர் முனைவர் க. பொன்முடி எம்.எல்.ஏ கண்டன உரையாற்றுகிறார்.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, நாடாளுமன்ற உறுப்பினர். துரை.ரவிக்குமார் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள், தோழமை கட்சி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்கின்றனர். இறுதியாக மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெய ச்சந்திரன் நன்றியுரையாற்றுகிறார்.

---

# மாவட்டக் கழகப் பிரதிநிதி எம்.ரமேஷ் மறைவு!

*சென்னை, நவ.11-*

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.ஆர்.விஜய் தந்தையும், 108 ’அ’ வட்டம் - மாவட்டப் பிரதிநிதியுமான எம். ரமேஷ் (வயது 56) நேற்று முன்தினம் (9.11.2025-ஞாயிறு) அதிகாலை 5.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் எண். 9/5, மங்காபுரம் 11வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை-31 எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நேற்று (10.11.2025-திங்கள்) மதியம் 2 மணியளவில் புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம். தேவராஜ்
**நவம்பர் 11 (1998)**



**வேலூர் மாவட்ட மற்றும் வேலூர் நகர அவைத் தலைவராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர், வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் வேலூர் நகர்மன்றத் தலைவராக ஒரு முறையும் நகராட்சி உறுப்பினராக 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**வேலூர் மாவட்ட நூலகத் தலைவர், மாவட்ட கூட்டுறவு சங்கம், வேலூர் கூட்டுறவு அச்சகத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பேறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா கைதியாக ஓராண்டு சிறை வாசகத்தை அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாயவரம் கிட்டப்பா
**நவம்பர் 11 (1983)**



**பழம்பெரும் சுயமரியாதை இயக்க வீரராகவும் – மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் நீண்டநாள் நண்பர். தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக மயிலாடுதுறை வட்டாரத்தில் கழகத்தை வளர்த்தவர்.**

**“நிரந்தரப் பிரிவு” என்னும் முள்ளால் நீ என்னைக் குத்தியதுதான் ஈட்டி முனையைவிடக் கூராக என் இதயத்தைக் கிழித்து விட்டது வலி தாங்க முடியவில்லையடா என் வாஞ்சைமிகு தம்பி” என தலைவர் கலைஞர் எழுதிய இரங்கற்பாவின் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**